Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 21, 2024

வியாழக்கிழமை மார்ச் 21, 2024 | ஒளி: 09 கதிர் 217 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

### இந்தியாவில் இருக்கும் இந்து அடிப்படைவாதிகள்

# “புத்தகயாவை இந்து ஆலயமாக காட்ட முயற்சி”





பௌத்த மதத்தை சீரழிக்கும் திட்டமிட்ட செயற்பாடுகள் நடப்பதாகவும், இதற்கு இடமளிக்காது அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பௌத்த மதத்தை பாதுகாக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் தேசிய சுதந்திர முன்னணி தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (20) விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

# நியூசிலாந்தில் இ–சிகரெட்டுக்குதடை



முழுச் செய்தி P6

### வெட்டுக்குநாறிமலை விவகாரம்:

# நீதவானுக்கு சிங்கள பேஸ்புக்கில் எச்சரிக்கை

### ஸ்ரீதரன் தெரிவிப்பு: மோடிக்கும் கடிதம் எழுதினார்



வெட்டுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரிதின நிகழ்வு தொடர்பில் பொலிஸாரால் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்ட 8 பேரையும் விடுதலை செய்த வவுனியா நீதிமன்ற நீதவானுக்குச் சிங்கள முக நூல் (பேஸ்புக்) ஒன்றில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பியான எஸ்.ஸ்ரீதரன் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்தார். தொடர்ச்சி P2

# இருவரும் இராஜினாமா



தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க, அனுராதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோர், பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற (கோப்) குழுவின் உறுப்புரிமையில் இருந்து இராஜினாமா செய்துள்ளனர்.

# கனடாவில் இருநாள் அனுரகுமார உரை



தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க, கனடாவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் புதன்கிழமை (20) மேற்கொள்ளப்பட்டிருந்தனர்.

கனடாவில் உள்ள புலம்பெயர் இலங்கையர்களுடன் பல சந்திப்புகளில் அவர் பங்கேற்க உள்ளார்.

மார்ச் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் தேசிய மக்கள் சக்தியின் கனடா குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டு கூட்டங்களில் உரையாற்றவுள்ளார்.

கனடாவில் உள்ள புலம்பெயர்ந்த இலங்கை முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களையும் அவர் சந்திக்க உள்ளார்.

# ஷாஃப்டரின் விசாரணை: நீதிமன்றம் நினைவூட்டல்



படுகொலை செய்யப்பட்ட பிரபல வர்த்தகர் தினேஷ் ஷாப்டரின் கையடக்கத் தொலைபேசி மற்றும் கணினி தரவுகள் தொடர்பான நிபுணர் அறிக்கையை நீதிமன்றில் உடனடியாக சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனுவெல அரசாங்க பரிசோதகருக்கு நினைவூட்டல் கடிதம் ஒன்றை புதன்கிழமை (20) வழங்கினார். தொடர்ச்சி P2

# அறிவித்த உடன் விலகினார் வசந்த



பொது நிறுவனங்கள் தொடர்பான குழு (கோப்) குழுவிலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர்ச்சியாகப் பதவி விலகி வரும் நிலையில், அந்த குழுவின் உறுப்பினராகப் புதிதாக அறிவிக்கப்பட்ட சுயாதீன எத்திரணியைச் சேர்ந்த வசந்த யாப்பா பண்டார, தனது பெயர் அறிவிக்கப்பட்ட உடனேயே பதவி விலகலை அறிவித்தார்.

பாராளுமன்றம் புதன்கிழமை (20) பிரதி தொடர்ச்சி P2



# ‘லங்கா தீப’வுக்கு 18ஆவது ஆண்டாக விருது

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மொனார்க் இம்பீரியலில் நடைபெற்ற ‘SLIM-KANTAR Peoples Awrd 2024’ இல், எமது சகோதர பத்திரிகைகளான டெய்லி லங்காதீப மற்றும் ஞாயிறு லங்காதீப ஆகியன தொடர்ந்து 18ஆவது ஆண்டாக ‘மிகவும் பிரபலமான செய்தித்தாள்’ விருதை வென்றுள்ளன. தொடர்ச்சி P2



# விலங்குகளுக்கு மன அழுத்தம்

நிலவும் வறட்சியான காலநிலையுடன் உடல் உஷ்ண அதிகரிப்பு காரணமாக விலங்குகளுக்கு மன அழுத்தம் மற்றும் நீர் பயம் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் டொக்டர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2



# காற்றாலை மின் உற்பத்தி சுற்றாடலுக்கு பேரழி

மன்னார் தீவு காற்றாலை மின் உற்பத்தி நிலையம் சுற்றாடல் பேரழிவை ஏற்படுத்தலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எச்சரித்தார்.

எரிசக்தி உற்பத்திக்குப் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களின் அதிகரித்த முதலீடு உகந்ததாக இருந்தாலும், இத்தகைய திட்டங்களைச் செயற்படுத்துவதில், சிறந்த மாற்று இடம் மற்றும் மிகவும் பயனுள்ள முதலீட்டுப் பிரதேசங்களைத் தெரிவு செய்வது அவசியம். பறவைகள் சரணாலயமாக விளங்கும் மன்னாரை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்படும் காற்றாலை மின் நிலைய நிர்மாணத் திட்டம் சுற்றாடல் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய செயற்திட்டமாகவே பல நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

உத்தேச மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்பு தொடர்பில் அரசாங்கத்திடம் பல கேள்விகளை முன்வைத்து நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் புதன்கிழமை (20) பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு எச்சரித்தார்.

அவர் மேலும் பேசுகையில், ஐக்கிய மக்கள் சக்தி காற்றாலை மின் உற்பத்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலுடன் உடன்படுகிறது. டீசல் மாபியாவிற்கு இடமளிக்காது, தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## இந்தியாவில் இருக்கும் இந்து அடிப்படைவாதிகள்
# “புத்தகயாவை இந்து ஆலயமாக காட்ட முயற்சி”





மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, அரசியலமைப்பில் பௌத்த மதத்தின் பாதுகாப்பு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் எழுத்துமூலம் அரசாங்கத்திற்கு சில விடயங்களை அறிவித்துள்ளனர். பிக்குவை போன்ற வேடமிட்ட ஒருவர், அவரின் மகன் அமெரிக்காவில் வசிக்கின்றார். இந்த நபர் நாங்கள் இலங்கையில் ஏற்றுக்கொண்டுள்ள திரிபீடகத்தை தவறு என்று கூறியும், நாட்டின் பௌத்தர்கள் நம்பும் சில விடயங்களை நிராகரித்தும் கருத்துக்களை வெளியிடுகின்றார்.

உதாரணத்திற்குப் புத்த பெருமான் இலங்கையில் பிறந்தார் என்று கூறிக்கொண்டு புத்தக்கயாவை இந்து ஆலயமாகக் காட்ட முயற்சிக்கின்றார். இந்தியாவில் இருக்கும் இந்து அடிப்படைவாதிகளுக்கும் புத்தகயாவை இந்து ஆலயமாக காட்ட வேண்டும் என்றே முயற்சிக்கின்றனர். அதற்குத் தேவையான தர்க்கங்களை இங்கிருந்து கொடுக்க முயற்சிக்கின்றார்.

இதனால் பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் இந்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு எழுத்துமூலம் அரசாங்கத்திற்குக் கோரிக்கை விடுத்துள்ளனர். ஏன் அரசாங்கத்தில் உள்ளவர்கள் பார்த்துக்கொண்டு இருக்கின்றீர்கள். இவர்களுக்கு இடமளிக்க வேண்டாம்.

பௌத்த மதத்தைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்றால் ஏன் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு இடமளிக்கக் கூடாது. இவற்றுக்கு இடமளித்தால் பௌத்த மதத்தை அந்நிய மதமாக்கலாம். இவர்கள் நாட்டை பற்றவைக்கும் நிலைக்குக் கொண்டு செல்வதைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது என்றார்.

# நீதவானுக்கு சிங்கள பேஸ்புக்கில் எச்சரிக்கை

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (20) இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான 2 ஆம் நாள் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்விடயத்தைச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்த ஸ்ரீதரன் எம்.பி. , தொடர்ந்து பேசுகையில்,

வெட்டுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரிதின நிகழ்வு தொடர்பில் பொலிஸாரால் அராஜகமான முறையில் கைது செய்யப்பட்ட 8 பேரும் வவுனியா நீதிமன்ற நீதியரசரால் விடுதலை செய்யப்பட்ட பின்னர் ‘‘வடக்கு எமது உரிமை ‘‘எனவும் பெயரில் உள்ள சிங்கள முக நூல் பக்கத்தில் இந்த 8 பேரையும் விடுதலை செய்த நீதியரசரின் பெயரைக்குறிப்பிட்டு விரைவில் அவர் குருந்தூர் மலை விவகாரத்தில் தீர்ப்பு வழங்கியவர் நாட்டை விட்டு தப்பியோடியது போன்று தப்பியோடுவார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதியாக வழங்கப்படும் தீர்ப்பைக்கூட சிங்கள பேரினவாதத்தால் ஜீரணிக்க முடியாமல் இருக்கின்றது என்பதைத்தான் இந்த சிங்கள முக நூல் செய்தி மிகவும் வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றது.

இந்த நாட்டில் அடிக்கடி நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றவர்கள் வெட்டுக்குநாறிமலையில் நடந்த பொலிஸ் அராஜகம் பற்றி கருத்தில் கொள்ளுங்கள். தான் விரும்பும் மதத்தை வணங்க முடியாத நாட்டில் எப்படி உங்களினால் நல்லிணக்கம் பற்றி வாய் கிழியக் கத்த முடியும்? நல்லிணக்கம் என்பது பேச்சளவில் மட்டும் இருப்பதல்ல. ஓர் இன மக்களை அனுசரித்தது நடப்பதில்தான் அது உள்ளது. எனவே வெட்டுக்குநாறிமலையில் இந்து மக்கள் வழிபட எந்த தடையும் இனிமேல் இருக்கக்கூடாது.

இந்தப்பிரச்சினைக்கு முழுமையான காரணம் தொல்பொருள்துறைக்கு அமைச்சராக இருக்கின்ற விதுர விக்கிரமநாயக்கதான். அவர் ஒரு நேர்மையாக, கள்ளம் கபடமற்று இதயசுத்தியோடு செயற்படுவாரேயானால், இனங்களை மதித்து செயற்படுவாரேயானால் இந்த நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் வந்திருக்க நியாயமில்லை.

வெட்டுக்குநாறிமலையில் தொல்லியல் திணைக்களமும் பொலிஸாரும் அராஜகமாக நடந்து கொண்ட முறை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கனுக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் நான் எழுதிய கடிதத்தின் பிரதியையும் இந்த சபையில் சமர்ப்பிக்கின்றேன் என்றார்.

# அறிவித்த உடன் விலகினார் வசந்த

சபாநாயகர் தலைமையில் கூடிய போது, சபாநாயகர் அறிவிப்பு வேளையில், கோப் குழுவின் உறுப்பினராக வசந்த யாப்பா பண்டாரவை தெரிவுக் குழு பரிந்துரைத்துள்ளதாக அறிவித்தார்.

எனினும் அவ்வேளையில் எழுந்த வசந்த யாப்பா பண்டார, தான் அந்தப் பதவியை இராஜினாமா செய்வதாகவும், பதவி விலகலை எழுத்துப்பூர்வமாக வழங்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

ஏற்கனவே, எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் 8 பேர் கோப் குழுவிலிருந்து விலகியுள்ளனர். கோப் குழுவின் தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமைக்கப்பட்டமையை எதிர்த்தே இவர்கள் குறித்த குழுவிலிருந்து பதவி விலகியுள்ளனர்.

# ‘லங்கா தீப’வுக்கு 18ஆவது ஆண்டாக விருது

இந்த விருது வழங்கும் விழா, இலங்கையின் கந்தருடன் இணைந்து இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) ஏற்பாடு செய்திருந்தது.

ஞாயிறு லங்காதீப பத்திரிகையின் பிரதம ஆசிரியர் காஞ்சன தசநாயக்க இந்த விருதைப் பெற்றுக்கொள்கிறார்.

இந்நிகழ்வில் டெய்லி லங்காதீப பத்திரிகையின் ஆசிரியர் அஜந்த குமார அகலகட, விஜய குழுமத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ஜனக ரத்னகுமார மற்றும் விஜய பத்திரிகைகளின் பல்வேறு பிரிவுத் தலைவர்கள் காணப்படுகின்றனர்.

# காற்றாலை மின்...

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை நடைமுறைப்படுத்துவதில் மாற்று இடங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். பறவைகளின் மத்திய ஆசியப் பயணப் பாதையில் மில்லியன் கணக்கான புலம்பெயர் பறவைகளுக்கு இந்தத் திட்டத்தால் ஏற்படும் கடுமையான ஆபத்தை, இந்தத் திட்டத்திற்காக நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை சுட்டிக்காட்டியும் இந்த அறிக்கையைப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் பல குறைபாடுகள் நிலவுகிறது. விஞ்ஞான தரவுகளின் அடிப்படையில் நிபுணர்கள் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், சுற்றுச்சூழல் காரணிகள் மட்டுமின்றி, திட்டத்தைச் செயல்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை குறித்தும் பலத்த சந்தேகங்கள் நிலவுகின்றன. இந்த ஒப்பந்தம் வழங்குவதற்கு டெண்டர் கோரப்பட்டுள்ளதா என்பது குறித்தும், இது தொடர்பான பிற விளைவுகள் குறித்தும் அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன். இத்திட்டத்திற்கு இதை விட பொருத்தமான பல இடங்கள் உள்ளன என்பதை விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.



# விலங்குகளுக்கு மன அழுத்தம்

விவசாய கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு ஏற்படும் சிக்கல்கள் குறித்தும் உன்னிப்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாகக் கோழிகள் முட்டையிடுவது குறைவதுடன், நாளொன்றுக்கு மாடுகளில் இருந்து கிடைக்கும் பால் அளவும் குறைய வாய்ப்புள்ளதாக அவர் கூறினார்.

எனவே, வீடுகள் மற்றும் பண்ணைகளில் கால்நடைகளுக்குத் தொடர்ந்து தண்ணீர் வழங்குதல், கால்நடைகளுக்குக் காற்றோட்டம் கிடைக்கும் வகையில் கால்நடைகளை வளர்ப்பது, கால்நடைகளுக்குத் தேவையான உயிர்ச்சத்துகள் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

# ‘ஏற்றுமதிப் பொருளாதார மாற்றத்தையே எதிர்பார்க்கிறோம்”

இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையிலான இடைவெளியை கடனாகப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் இன்னும் 10 வருடங்களில் இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்க நேரிடும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி விரைவில் ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கிய மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இவற்றுக்குத் தேவையான சட்டத்தை ஏப்ரல் மாதமளவில் பாராளுமன்றத்தில் சமர்பிக்க எதிர்பார்த்திருப்பதாகவும்,



அரசாங்கத்தின் நிதி நிர்வாகம் தொடர்பிலான புதிய சட்டமூலமும் அதனுடன் சமர்பிக்கப்பட உள்ளதாகவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் எனவும் குறிப்பிட்டார்.

கேகாலை மங்கெதர டெம்பிடி புராதன பிரிவெனா விகாரையில் புதிதாக அமைக்கப்பட்ட தங்க வேலியை புதன்கிழமை(20) திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

விகாராதிபதி ஸ்ரீ ஜனாநந்தபிதான தேரரின் கோரிக்கைக்கமைய கடவத்தையில் வசிக்கும் ஜகத் சுமித்ர கருணாரத்ன மற்றும் மல்லிகா கருணாரத்ன ஆகியோரின் நன்கொடையில் மங்கெதர டெம்பிடி புராதன விகாரையில் தங்கவேலி அமைக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் ஜகத் சுமித்ர கருணாரத்ன மற்றும் மல்லிகா கருணாரத்ன ஆகியோருக்கான நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

# ஷா:ப்டரின் விசாரணை: நீதிமன்றம் நினைவூட்டல்

உயிரிழந்தவர் பயன்படுத்திய இலத்திரனியல் சாதனங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் இரசாயன பகுப்பாய்வாளரின் அறிக்கை இதுவரை கிடைக்கப்பெறவில்லை என முன்வைக்கப்பட்ட உண்மைகளைப் பரிசீலித்த நீதவான், நினைவூட்டல் கடிதத்தை வழங்க உத்தரவிட்டுள்ளார்.

இறந்தவரின் கையடக்க தொலைபேசி எண்ணை மனைவிக்கு வியாபார நோக்கத்திற்காக வழங்குவது தொடர்பான கோரிக்கை அரசாங்கத்தின் நிபுணர் அறிக்கையைப் பெற்ற பின்னர் பரிசீலிக்கப்படும் என்றும் மேலதிக நீதவான் தெரிவித்தார்.

தொடர்புடைய சிம்பை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளைப் பரிசீலித்து, அடுத்த விசாரணை அமர்வில் அது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சி.ஐ.டியினரால் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

தினேஷ் ஷாஃப்டர் கொல்லப்படுவதற்கு முன்னர் அவர் வியாபாரத்திற்குப் பயன்படுத்திய தொலைபேசி இலக்கத்தைக் காட்டி, சிம் கார்ட் அல்லது புதிய சிம்கார்டை பெற்றுக் கொள்ளுமாறு உத்தரவிடுமாறு அவரது மனைவி கோரியமை தொடர்பிலான உண்மைகளைத் தெரிவிக்கும் போதே நீதவான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை அடையாளம் காண மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என நீதிமன்றில் அறிவித்துள்ளனர்.

பொரளை பொது மயானத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற மர்மச் சம்பவத்தினால் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஷாப்டர் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# செனுக் விஜேசிங்கவின் ‘My Tribute’ இசை நிகழ்ச்சியை கண்டுகளித்தார் ஜனாதிபதி

சௌந்தரி டேவிட் ரொட்ரிகோ மற்றும் நெரஞ்சன் டி சில்வா ஆகியோருடன் இணைந்து செனுக் விஜேசிங்க வழங்கிய *‘My Tribute’* இசை நிகழ்ச்சியை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க ஆகியோர் செவ்வாய்க்கிழமை (19) பிற்பகல் கண்டுகளித்தார்கள்.

கொழும்பு லயனல் வென்ட் திரையரங்கில் நடைபெற்ற *‘My Tribute’* இசைநிகழ்ச்சியில் கிறிஸ்டோ பிரின்ஸ் டிரம்ஸ் இசைத்ததோடு நதினி ஒலேகாசெக்ரேம் மற்றும் ஹேமால் குருவிதாராச்சி ஆகியோரும் கலைஞர்களாக இதில் இணைந்து கொண்டனர். சோல் சவுண்ட்ஸ் அகாடமி பாடகர் குழுவினர் இந்த இசை நிகழ்ச்சியில் பாடல் இசைத்தனர்.





# “குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயற்சி”

மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பள விவகாரம் தொடர்பில எதிர்க்கட்சிக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. முதலில் அந்த வேறுபட்ட நிலைப்பாட்டை அவர்கள் சரி செய்ய வேண்டும். அதனை விடுத்துக் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க அவர்கள் முயற்சிக்கக் கூடாதென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை(20) எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், மத்திய வங்கி அதிகாரிகளின் சம்பள உயர்வு பிரச்சினை அரசாங்கத்தாலோ அல்லது நிதியமைச்சாலோ உருவாக்கப்பட்டதல்ல. அதனை அரசியலாக்கி லக்ஷ்மன் கிரியெல்ல குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்க்கின்றார். சபையில் தவறான அர்த்தத்தை வழங்க வேண்டாம்,



மத்திய வங்கி சட்டம் தொடர்பில் எதிர்க்கட்சிக்குள்ளேயே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அது தொடர்பில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் கருத்து வித்தியாசமானது.

நாம் அரசாங்கம் என்ற வகையில், நிதி கொள்கையைச் செயற்படுத்துவதற்கு மத்திய வங்கிக்குச் சுயாதீனம் வழங்கியுள்ளோம்.

அந்த வகையில், எதிர்க்கட்சியில் சிலர் இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என கேட்கின்றனர். அந்த வகையில், இந்த விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சிக்கு முழுமையான தெளிவு இல்லை என்பதையே எம்மால் கூற முடியும்.

அரச நிதியை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு மத்திய வங்கியிடம் கிடையாது. அது நிதிக் கொள்கையை முகாமைத்துவம் செய்கிறது. அது தொடர்பான எதிர்க்கட்சியின் தவறான கருத்து.

அதைத் திருத்திக் கொள்ளப்பட வேண்டும். நிதிக் கொள்கை முகாமைத்துவம் தொடர்பில் முழுமையான அதிகாரம் மத்திய வங்கிக்குள்ளது.

அதில் சுயாதீனமாகச் செயல்படக்கூடிய அதிகாரம் மத்திய வங்கிக்குக் காணப்படுகிறது. அந்த வகையில் அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான பொறுப்பு அல்லது அதிகாரம் பாராளுமன்றத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளது.

அது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரும் தெளிவு பெற வேண்டி உள்ளது என்றார்.

# தென்னை மரத்தில் தங்க வளையல்

பாலித ஆரியவன்ச

வீடொன்றில் திருடப்பட்ட 1,40,000 ரூபாய் பெறுமதியான தங்க வளையல், 40 அடி உயரத் தென்னை மரத்தின் உச்சியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இளைஞன் ஒருவரையும் கைது செய்யப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பதுளை, மெதபத்தனை பகுதியில் வீடொன்றில் யாரும் இல்லாதபோது ஜன்னலை உடைத்து உள் புகுந்து தங்க வளையல் ஒன்றையும், 37,000 ரூபாய் பணத்தையும் திருடிச்சென்றுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றிக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார்



22 வயதுடைய இளைஞன் ஒருவரைக் கைது செய்துள்ளனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, திருடப்பட்ட பணத்தைத் தான் செலவிட்டதாகவும் தங்க வளையலை, தென்னை மரத்தின் உச்சியில் மறைத்து வைத்துள்ளதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். மேலும், இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

# இயந்திரங்கள் மோதியதில் ஒருவர் பலி



மாத்தளை-வில்கமுவ, எலவனகந்த பகுதியில் புதன்கிழமை (20) இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நெல் அறுவடை இயந்திரங்கள் இரண்டு ஏற்றப்பட்ட இரண்டு உழவு இயந்திரங்களும் பாதையின் சரிவுப் பகுதியில் சென்ற போது இயந்திரம் ஒன்றில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் மற்றைய இயந்திரமும் அதனுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தில் உயிரிழந்தவர் மேல் மல்கஸ்வெவ புளியங்குளத்தை சேர்ந்த இருபத்தி ஆறு வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்றத்தை அவமதித்த சட்டத்தரணிக்கு விளக்கமறியல்

நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறப்படும் சட்டத்தரணி ஒருவரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புதன்கிழமை (20) உத்தரவிட்ட உயர் நீதிமன்றம், நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணியான ஜயதுங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரிதி பத்மன் சூரசேன, காமினி அமரதுங்க மற்றும் குமுதுனி விக்ரமசிங்க ஆகியோர் இவ்வாறு தீர்ப்பளித்தனர்.




# அலுவலகம் திறப்பு

ஜனாதிபதியின் தேசிய ஒருங்கிணைப்பு அலுவலகம் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் வடிவேல் சுரேஷ் தலைமையில் கொழும்பில் உத்தியோகபூர்வமாக புதன்கிழமை (20) திறந்து வைக்கப்பட்டது.

# பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஸ்தாபிப்பு

ஊவா, வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் புதிதாக மருத்துவ பீடத்தைத் தாபிக்கும் நிகழ்வு பதுளை தபாலகக் கட்டிடத் தொகுதியின் நிமல் சிறிபால டி சில்வா கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (22) பி.ப.3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வாவின் அழைப்பின்




பேரில், கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். இந்நிகழ்வில் மருத்துவ பீடத்திற்குப் புதிதாக உள்வாங்கப்படவுள்ள மாணவர்களுக்கான பரிசளிப்பு இடம்பெறவுள்ளதுடன், மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் அதிபர்களை தெளிவூட்டும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

குறித்த தினத்தில் மருத்துவ பீட மாணவர்களின் கற்கைக்காக அமைக்கப்பட்ட ரூபாய் 400 இலட்சம் பெறுமதியான உடற்கூறு பரிசோதனை ஆய்வுக்கூடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

# “சமுதாயத்தை அழிக்கின்ற செயல்”

தங்களின் தவறுகளை மூடி மறைக்கத் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையை மூடி சமுதாயத்தை அழிக்கின்ற செயலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவந்து அந்த வைத்தியசாலையை மீண்டும் உடனடியாக திறக்க சுகாதார அமைச்சரும் கிழக்கு மாகாண ஆளுநரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பியான எஸ். ஸ்ரீதரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (20) இடம்பெற்ற சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான 2 ஆம் நாள் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு வலியுறுத்திய ஸ்ரீதரன் எம்.பி. தொடர்ந்து பேசுகையில்,

அம்பாறை மாவட்டத்தில்



உள்ள திருக்கோவில் மெதடிஸ்த தமிழ் வித்தியாலய மாணவன் ஜெயக்குமார் விதுர்ஜன் (16 வயது) கடந்த 2024 -03- 11ஆம் திகதி காலை நடைபெற்ற பாடசாலை மரதன் ஓட்டப்போட்டியில் பங்கேற்றபோது திடீரென மயக்கமுற்றதால் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்திருந்தார்.

இந்த மாணவன் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது கிட்டத்தட்ட 3 மணிநேரமாக அந்த மாணவனுக்கு எவ்வித சிகிச்சையும் அளிக்கப்படவில்லையென அந்த ஊர் மக்களும் மாணவனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவர்களும் குறிப்பிடுகின்றனர். வைத்தியர்களின் அசமந்தப்போக்கே மாணவனின் மரணத்திற்குக் காரணமென அந்த மக்கள் இன்றும் கொதித்துப்போயுள்ளனர். அதனால் அவர்கள் அந்த வைத்தியசாலைக்கு முன்பாக நிகழ்த்திய சில போராட்டங்கள் , உணர்வுகளை வெளிப்படுத்தியதன் காரணமாக வைத்தியசாலைக்குச் சிறு சேதங்கள் ஏற்பட்டிருக்கக்கூடும்.

ஆனால், இன்று 11 நாட்களாக இந்த திருக்கோவில் ஆதார வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. மக்கள் கிழக்கு மாகாண ஆளுநரிலிருந்து சொல்லக்கூடிய அனைத்து தரப்பினரிடமும் இந்த விடயத்தைக் கூறியுள்ளனர். எமது அம்மாவட்ட எம். பியான கலையரசன் கூட அதனை மீண்டும் திறப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஆனால் அந்த வைத்தியசாலையை இயங்க வைக்காமல் 11 நாட்களாக மூடப்பட்டுள்ளது. சராசரி 340க்கு மேற்பட்ட நோயாளர்கள் அந்த வைத்தியசாலைக்கு வந்து திரும்பிப் போயுள்ளனர்.

# ரயிலுடன் மோதுண்டு இளைஞன் பலி

மாத்தறை- பிலதுவ ரயில் நிலையத்திற்கு அருகில் வைத்து, மாத்தறையிலிருந்து பெலியத்த நோக்கிச் சென்ற ரயிலுடன் மோதி இளைஞன் உயிரிழந்துள்ளார்.

அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக மாத்தறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் மாத்தறை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது.


**உங்களின் கவனத்திற்கு**

அடகு வைக்கப்பட்டு மீட்க முடியாமல் அறுதியாகவுள்ள உங்களின் தங்க நகைகளை எங்களால் மீட்கப்பட்டு உங்களுக்கு அதிகூடிய வலையை நாம் தருவோம்.

ஹனா கோல்ட் ஹவுஸ்
076 707 8969




# அரசியலமைப்பின் விதிகளின்படி தேர்தல்கள் நடத்த வேண்டும்

இது தேர்தல் ஆண்டு என்று இந்த ஆண்டின் தொடக்கத்தில் அறிவிக்கப்பட்டது. நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி, ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஏதேனும் சர்ச்சைக்குரிய சூழல் ஏற்பட்ட போது, ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்ட அறிவிப்பும் வாக்கெடுப்பு இடம்பெறும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

அப்படி இருந்தும் ஜனாதிபதித் தேர்தலா அல்லது பொதுத் தேர்தலா முதலில் நடத்தப்பட வேண்டுமா என்பது சர்ச்சைக்குரிய விடயமாக மாறி வருகிறது. ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என அரசாங்க மற்றும் எதிர்க்கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதிகள் சிலர் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, பொதுத் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கத் தலைவர்களின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அத்துடன், நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை எவராலும் ஒத்திவைக்க முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்திருந்தார்.

இவ்வருடம் நடைபெறவுள்ள பிரதான தேசியத் தேர்தல் தொடர்பில் பிரதான கட்சிகளின் தலைவர்கள் இன்னமும் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை என்பதை பல்வேறு தரப்பு அரசியல்வாதிகள் வெளிப்படுத்தும் இந்தக் கருத்துக்களில் இருந்து காணமுடிகிறது.

வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் பிரச்சினை ஏற்படும் வரை நாட்டு மக்களின் இறையாண்மையை இழுத்தடிக்க அனுமதிக்கக் கூடாது. இது நாட்டின் ஜனநாயகத்தில் மிகவும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்துகிறது. ஒரு நாட்டின் ஜனநாயகத்துக்கு விடுக்கப்படும் சவால் என்பது இந்நாட்டு மக்களின் உரிமைகளைப் பறிப்பதாகும். இறுதியில் நாட்டை அராஜகத்திற்கு இழுத்துச் செல்ல இது வழி வகுக்கும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவதே பொருத்தமானது ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதால், ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவரின் கட்சி, அடுத்த தேர்தலில் மற்ற கட்சிகளைக் கழுவி ஊற்றி, பெரிய வெற்றியைப் பெறும் வாய்ப்பைப் பெறுவதாகவும், இதுபோன்ற பேரணிகளால் உருவாக்கப்பட்ட பாராளுமன்றம் பிரதிபலிக்காது.

பல தேர்தல்கள் நடத்தப்படாமலே உள்ளன. மாகாண சபைகளுக்கு முடிச்சு போடப்பட்டு உள்ளமையால், அத்தேர்தல் நடத்தப்படவில்லை. அத்துடன், உள்ளூராட்சி மன்றங்கள் யாவும் முடக்கப்பட்டுள்ளன. அதற்கான தேர்தல்களும் நடத்தப்படவில்லை.

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், மக்களின் நேரடி பிரதிநிதிகளாவர், மக்களின் பிரச்சினைகளுடன் நேரடியாக தொடர்பினை கொண்டவர்கள். அவர்களினால்தான், மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க முடியும். இவ்விரு தேர்தல்களும் ஒத்திவைக்கப்பட்டுள்ளமையால், மக்களுக்கு கிடைக்கவேண்டிய சேவைகள் பல கிடைக்காமலே போய்விட்டன.

எனினும், பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைத்து விளையாட இயலாது. ஒரு நாட்டில் தேசிய தேர்தல்கள் அந்த நாட்டின் அரசியலமைப்பின் விதிகளின்படி நடத்தப்பட வேண்டும், தனிப்பட்ட அரசியல் தலைவர்களின் நலன்கள் மற்றும் விருப்பங்களின்படி அல்ல என்பதை வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# தனக்குத்தானே சூனியம் வைத்த 'நூல்'

**முருகானந்தன் தவம்**

முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்பு செயலரும் "கோட்டா கோ கோம் ", 'அரகலய' மக்கள் கிளர்ச்சி போராட்டங்களினால் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியவருமான கோட்டாபய ராஜபக்ஷவினால் எழுதி அண்மையில் வெளியிடப்பட்ட 'ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கான சதி' (*the conspiracy to oust me from the presidency* ) என்ற நூல் சிங்களத் தரப்புக்களிடையில் பல்வேறு எதிர் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில், நாட்டின் சிறுபான்மையினங்களான தமிழ், முஸ்லிம் மக்களிடையில் விசனத்தையும் கேள்விகளையும் ஏற்படுத்தியுள்ளது.

கோட்டாபயவின் நூல் வெளிவரப் போகின்றது என்ற தகவல் வெளியான நாளிலிருந்து அந்த நூலுக்கு அரசியல் கட்சிகள் , அரசியல் வாதிகள், மக்களிடையில் மட்டுமன்றி, வெளிநாடுகளின் தூதரகங்கள், இராஜதந்திரிகள் மத்தியில் கூட, கோட்டாபய ராஜபக்ஷவின் நூலில் இரகசியமான, பெறுமதி வாய்ந்த, நாட்டையே அதிரவைக்கக்கூடிய, அவரின் பதவி விலகலின் பி ன்னாலுள்ள சதிகள், வெளிநாடுகளின் செயற்பாடுகள் தொடர்பிலான தகவல்கள் வெளிப்படுமென்ற பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டிருந்தது. ஆனால், பெரும் பூகம்பமாக எதிர்பார்த்தது புஷ்வாணமான கதையாகவே கோட்டாபயவின் நூல் வெளிவந்துள்ளது.

அந்த நூலில், தமிழ், முஸ்லிம் மக்கள் மீதான வெறுப்புணர்ச்சியை அவர் பிரதானமாக வெளிப்படுத்தியுள்ளதுடன் தான் சிங்கள மக்களினால் வெறுக்கப்படவோ விரட்டப்படவோ இல்லை. தமிழ், முஸ்லிம்களே என்னைப் பதவியிலிருந்து வெளியேற்றச் சதி செய்தார்கள் எனக் கூறி, தமிழ், முஸ்லிம் மக்களை விசனப்பட வைத்ததுடன் சிங்களவர்களை "என்ன இப்படி அப்பட்டமான பொய்களை எழுதியுள்ளாரே" என சிரிக்கவும் வைத்துள்ளது.

மேலும், நூலின் பிரதான கருப்பொருள் அல்லது குற்றச்சாட்டு அல்லது தனக்கு எதிரான போராட்டத்தின் பின்னாலுள்ள சதியாக அவர் கூறியிருப்பதாவது,

"2022 ஏப்ரல் 9ஆம் திகதி காலிமுகத்திடலில் 'அரகலய' என அழைக்கப்பட்ட போராட்டம் ஆரம்பமாகி, அங்குப் போராட்டக்காரர்களால் கூடாரம் அமைக்கப்பட்டு, அதற்கு 'கோட்டா கோ கம' எனப் பெயரிடப்பட்டதன் பின்னர், இந்த 'அரகலய' போராட்டமானது ஓர் இலக்கை அடைந்து கொள்வதற்காகச் சகல இன, மதங்களையும் சேர்ந்த மக்களை ஒன்றிணைத்திருப்பதாக சில ஊடகங்களில் சிலர் பிரசாரம் செய்தனர். அதேபோன்று எனது அரசாங்கத்துக்கு எதிராக ஒன்று திரண்ட இளைஞர்களால் 'இனவாதம்' தோற்கடிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால் காலிமுகத்திடல் 'அரகலய' போராட்டத்துக்கு வருகைதந்தவர்கள் யார் என நன்றாக ஆராய்ந்து பார்த்தால், ஏற்கெனவே என்னை எதிர்த்தவர்களே அங்கு வந்தனர் என்பதைத் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும்.

'அரகலய' போராட்டத்தில் சிறுபான்மையினரின் வகிபாகம் பெருமளவுக்கு இருந்தது. ஏனெனில், அவர்களை அங்கு வருவதற்கு ஊக்குவிக்கும் காரணிகள் இருந்தன. நாம் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எதிரான போரில் வென்றதில் இருந்து நான் தமிழர் விரோதியாகவே பார்க்கப்பட்டேன். 'ஒற்றை அரசு' என்பதற்குப் பதிலாக 'ஒருமித்த இலங்கை' என புலம்பெயர் தமிழர்களால் முன்வைக்கப்பட்ட கோஷத்தை 'அரகலய'வில் வெளிப்படையாகப் பார்க்கமுடிந்தது. அதேபோன்று 2012 இல் பொதுபலசேனாவின் எழுச்சி மற்றும் அவ்வமைப்புடன் எனக்கிருந்த தொடர்புகளால் நான் முஸ்லிம்களுக்கு எதிரானவனாக நோக்கப்பட்டேன். 2019இல் பெருமளவான தமிழ், முஸ்லிம்கள் எனக்கு எதிராக வாக்களித்த போதிலும், நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டேன். இத்தகைய பல்வேறு காரணங்களால் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் எனக்கு எதிராக 'அரகலய'வில் ஒன்றிணைந்தார்கள். நான் பதவியில் தொடர்ந்தால் சிங்கள பௌத்தர்கள் மேலும் பலப்படுத்தப்படுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக இப்போராட்டங்களில் ஈடுபடுவதற்கு அவர்கள் தூண்டப்பட்டிருக்கக்கூடும்"

கோட்டாபய தனது நூலில் குற்றம் சாட்டியிருப்பதைப் போன்று அவரை ஜனாதிபதி பதவியிலிருந்து வெளியேற்றும் சதியில், போராட்டத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம்களின் வகிபாகமே மேலோங்கியிருந்தது என்றால் அவரிடம் தமிழ் முஸ்லிம் மக்கள் சார்பில் சில கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது.

அதாவது ஜனாதிபதியாகவிருந்த கோட்டாபய, ஜனாதிபதி பதவியிலிருந்து விரட்டியடிக்கத் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து காலிமுகத்திடலில் ஒன்றிணைத்துப் போராடியிருந்தால் அல்லது ஜனாதிபதி மாளிகையை ஆக்கிரமித்து அழிவுகளை ஏற்படுத்தியிருந்தால் கோட்டாபயவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த 69 இலட்சம் சிங்களவர்களில் குறைந்தது ஒரு இலட்சம் சிங்களவர்களாவது ஆதரவாக ஏன் காலிமுகத்திடலில் களமிறங்கவில்லை? தமது ஜனாதிபதிக்கு எதிராகப் போராடிய அல்லது சதி செய்த தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஏன் சிறு எதிர்ப்பையேனும் வெளிப்படுத்தவில்லை?

அதுமட்டுமன்றி, ஹம்பாந்தோட்டையில் உள்ள தங்காலை நகரில் அமைக்கப்பட்டிருந்த ராஜபக்ஷக்களின் தந்தையான டி.ஏ.ராஜபக்ஷவின் உருவச் சிலையை அடியோடு உடைத்தெறிந்தவர்களும் தமிழ், முஸ்லிம் மக்களாக இருந்தால், ராஜபக்ஷக்களின் கோட்டைக்குள்ளேயே அவர்களின் தந்தையின் உருவச் சிலையைத் தகர்த்தெறியும் அளவுக்குத் தமிழ், முஸ்லிம் மக்கள் பலமானவர்களா?

"கோட்டா கோ கோம்" போராட்டத்தை வன்முறையாக மாற்றி தென்னிலங்கை முழுவதும் வன்முறைகளில் ஈடுபட்டு ராஜபக்ஷக்களின் ஆதரவு அமைச்சர்கள், எம்.பிக்கள். அரசியல் வாதிகளின் வீடுகளை, சொத்துக்களைத் தீயிட்டு அழித்தவர்கள், வாகனங்களைப் புரட்டிப்போட்டு எரித்தவர்கள் சிங்கள எம்.பியை கொன்றவர்கள் எல்லாம் தமிழ், முஸ்லிம்கள் தானா? அவ்வாறானால், ஏன் இந்த வன்முறைகள் தொடர்பில் ஒரு தமிழரோ, முஸ்லிமோ கைது செய்யப்படாமல், பல சிங்களவர்கள் கைது செய்யப்பட்டனர்?

சிங்கள எம்.பியைக் கொன்று கலவரங்களில் ஈடுபட்டபோது கோட்டாபயவுக்கு வாக்களித்த 69 இலட்சம் சிங்களவர்களும் ஏன் வேடிக்கை பார்த்தார்கள்? 'அரகலய' போராட்டத்தில் ஈடுபட்டமை, அரச சொத்துக்களைத் திருடியமை, அழித்தமை. சேதம் விளைவித்தமை . கலவரங்களுக்குத் தூண்டியமை தொடர்பில் இன்று வரை கைது செய்யப்பட்டு வருபவர்களில் எத்தனை பேர் தமிழர்கள் முஸ்லிம்கள்?

ஜனாதிபதியாகவிருந்த கோட்டாபயவுக்கு எதிரான போராட்டத்தை நிறுத்தவும் மக்கள் திரள்வதனை தடுக்கவும் அரசு பொலிஸார் மூலம் நீதிமன்றங்களை நாடி, மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் வகையிலான தடை உத்தரவுகளைப் பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுத்தபோதும், நீதிமன்றங்கள் மக்களின் போராட்டங்களுக்குத் தடை விதிக்க மறுத்தது ஏன்? அவ்வாறு மறுத்த நீதிமன்றங்களின் நீதிபதிகளாக இருந்தவர்கள் தமிழரோ முஸ்லிமோ அல்ல. சிங்களவர்கள்தான். அப்படியானால், ஏன் அவர்கள் தடை விதிக்க மறுத்தனர்?

மேலும், கோட்டாபய தனது நூலில், "2022இல் காலப்பகுதியில் அப்போதைய இராணுவ தளபதி ஷவேந்திர சில்வா பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஆலோசனைகளுக்கு அமையச் செயற்படவில்லை. போராட்டக்காரர்களிடம் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை. தடிகள், வாள்கள் என்பனவே அவர்களிடம் இருந்தன. அவ்வாறான நிலையில், கலகத்தை முறையாக அடக்கியிருக்க முடியும். பாதுகாப்பு செயலாளர், இராணுவ தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோர் கலகத்தைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அவ்வாறு செயற்படவில்லை எனவும் குற்றம்சாட்டுகின்றார். அப்படியானால், பாதுகாப்பு செயலாளர், இராணுவ தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் தமிழரா முஸ்லிமா? இந்தக் கேள்விகளுக்கு கோட்டாபய நிச்சயம் பதிலளிக்கப் போவதில்லை. எனவே, இராணுவத்திலிருந்து தப்பியோடி அமெரிக்காவில் தஞ்சமடைந்ததன் மூலம் தான் இராணுவத்திற்குத் தகுதியில்லாதவன் என்பதை நிரூபித்த, குடும்ப அரசியல் மூலம் ஜனாதிபதியாகி சிறிது காலத்திலேயே பதவியிலிருந்து தப்பியோடி வெளிநாடுகளில் தஞ்சமடைந்து தான் அரசியலுக்கும் பொருத்தமில்லாதவன் என நிரூபித்து, இப்போது சொந்த நாட்டிலேயே வெளியில் நடமாட முடியாத நிலையில் தலைமறைவு வாழ்க்கைபோல் வாழும் கோட்டாபய சொந்த செலவில் தனக்குத்தானே சூனியம் வைத்ததுபோல் நூல் ஒன்றை எழுதித் தான் ஒரு பொய்யன், நூல் எழுதக்கூடத் தகுதியில்லாதவன் என்பதையும் இப்போது நிரூபித்துள்ளார்.



## வாழ்வியல் தரிசனம்

உங்களுடன் நண்பர்கள் சுற்றியிருக்க விரும்பும்போது, நீங்கள் தேவையில்லாமல் விலகினால், உங்களுக்கு மனச்சோர்வு இருக்கின்றது என்று அர்த்தம். இதற்கு ஒரே வழி, நீங்களே உங்களுடன் தோழமை கொள்வதுதான். உங்களுக்கு நீங்களே எஜமானன். அத்துடன், உங்களுக்கு நீங்களே நம்பிக்கையான நபரும் கூட!

ஒருவரிடம் பணம் இருக்கும்போது, அவரைச் சுற்றி, பலர் சேர்ந்து விடுவார்கள். அவரிடம் இருக்கும் பணத்தைச் செலவழிக்கச் செய்த பின்னர், அவரைக் கைகழுவி, நடுத்தெருவில் விட்டு விடுவது உலக யதார்த்தம். ஆனால், நல்ல நண்பர் எத்தகைய துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும் காவல் செய்யும் காவலன் போல் இணைந்தே இருப்பான்.

நண்பர்கள் என்று நம்பி, அவர்கள் கெட்டவர்கள் என்று தெரியாமல் போனவர்களை நாங்கள் அன்றாடம் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். நண்பர்களிடம் நம்பி ஏமாந்தவர்கள் ஒன்றுக்கும் வழியில்லாது, நடுவீதியில் தனிமைப்பட்டு நிற்பது பரிதாபமானது. எனவே, துணிவுடன் இயங்குவதே மனோபலத்தை உருவாக்கும்.

இயலாது; என்னால் முடியாது எனும் எண்ணங்கள் தகர்க்கப்படல் வேண்டும். அனுபவப்பட்டவர்களுக்கு ரோசம் அதிகம். எளிதில் எவருடனும் நட்புக்கொள்ளல் ஆகாது. வீறு பெற்றவனை வீழ்த்த முடியாது. நடுவீதியில் தனிமைப்பட்டு நிற்பது பரிதாபமானது. எனவே, துணிவுடன் இயங்குவதே மனோபலத்தை உருவாக்கும்.

நன்றி– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குடிநீர் நெருக்கடி



முல்லைத்தீவு-மாந்தை கிழக்கில் பல கிராமங்களில் குடிநீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கின் வடகாடு கிராமத்தில் குடிநீருக்கு மக்கள் நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. பூவரசங்குளம் கிராமத்தில் கிராமத்திற்குள் குடிநீர்த் திட்ட மூலம் குடிநீர் கிடைக்கின்ற போதிலும், கிராமத்தின் முழுமையான மக்களுக்கும் இக்குடிநீர் கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மாந்தை கிழக்கின் பல கிராமங்களில் தற்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாகத் திறந்த கிணறுகளின் நீர் மட்டம் அடிநிலையினை சென்றடைந்து இருப்பதாகவும் குடிநீருக்காகப் பல குடும்பங்கள் நீண்ட தூரங்கள் குடிநீருக்காகச் செல்ல வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், குடிநீர் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ள கிராமங்களின் மக்கள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

– நடராசா கிருஸ்ணகுமார்

# பெண்ணியம் கண்ணீரில்



றொசில்டா அன்டன்



சாருமதிதன் நடையை வேகப்படுத்தினாள். அதிகாலை ஐந்து மணிக்கே எழும்பிடுவாள்.

வயதான தனது தாயுடன் தனி வீட்டில் வசித்து வந்தாள். பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்றுவதால் நேரத்துடனே வீட்டு வேலைகளையும் முடித்துக் கொண்டவள் சமைத்து மதியத்திற்குத் தேவையான உணவையும் சேர்த்தே பார்சல் கட்டி எடுத்துச் செல்வது வழக்கம். மாலை இரண்டு மணிக்குப் பிறகு வேலை முடிய மறுநாள் சமையலுக்குத் தேவையானதை வாங்கி வருவது வழக்கம். அவளின் வீடு சிறு கல்வீடு பேருந்து பயணம் பிறகுப் பத்து நிமிட நடையில் செல்ல வேண்டும். நடையின் வேகத்தைத் துரிதப்படுத்தினாள். தாய் தனிமையில் இருப்பதால் தான் இந்த அவசரம்.
"அம்மா சாப்பிட்டிங்களா சற்று பொறுங்கோ குளிச்சுட்டு வாரன்" கிணற்றடியை நோக்கி நடந்தாள்.

அப்பா உயிருடன் இருக்கும் வரை வீட்டு கஷ்டம் தெரியவில்லை. மூன்று பெண்பிள்ளைகள் மூத்தவள் சாருமதி இரண்டாவது பானுமதி மூன்றாவது கடைக்குட்டி கலைமதி மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அப்பா அடிக்கடி அம்மாவிடம் கூறும் வார்த்தை"அழகிகள் என் பிள்ளைகள். திருமணம் செய்ய மாப்பிள்ளைகள் தேடி வருவான்கள்" அப்பாவிற்கு மூவருமே தேவதைகள். மூவரும் ஆறு வருட இடைவெளியில் பிறந்தவர்கள். சாருமதி படித்து விட்டு ஆசிரிய கலவியற் கல்லூரியில் படித்து விட்டு வேலைக்காகக் காத்திருந்தாள். வேலை ஆரம்பமே அமர்க்களமாக ஆரம்பமானது பிடித்தமான பாடசாலை, சுற்றுச்சூழல் என அவள் ஆசைப்பட்டது போல ஆசிரிய பணியும் அமைந்தது. சாருமதி பாடசாலையில் கற்பிக்கும் காலத்திலே சுரேஸ் என்கிற சக ஆசிரியர் பழக்கமானார்.

> **வங்கி ஒன்றின் முகாமையாளர், வீட்டிற்கு ஒரே பெண் பிள்ளை, ஏகப்பட்ட வரதட்சணை சாருமதியின் வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்தான் சுரேஸ். சுயநினைவுக்கு வந்தவளாய் கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்த விட்டு தன் வேலையை பார்க்கலானாள்**

நாளடைவில் திருமணம் பேசுமளவிற்கு நட்பு காதலானது. சுரேஸ் "சாரு... எங்கட வீட்ட அம்மா தான் பிரச்சினை எடுக்கிறா அவக்கு நான் படிக்க நிறைய செலவு செய்தாவாம் வரதட்சணையாகச் சொந்தமாக வீடு கேட்கிறா இப்ப உனது நிலைமையும் எனக்குத் தெரியும்"
"சாரு அதற்கு உங்கட பதில் என்ன சுரேஸ்"

"சாரு எனக்கு அம்மாவ மீறி முடிவு எடுக்க முடியாது தற்கொலை செய்வன் என்று சொலறா நாம பிரிஞ்சு நண்பர்களாக இருப்போம்"

ஆடம்பரமாய் திருமணம் வங்கி ஒன்றின் முகாமையாளர், வீட்டிற்கு ஒரே பெண் பிள்ளை, ஏகப்பட்ட வரதட்சணை சாருமதியின் வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்தான் சுரேஸ். சுயநினைவுக்கு வந்தவளாய் கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்த விட்டு தன் வேலையை பார்க்கலானாள்.

மறுநாள் காலை தங்கை இருவரும் கோயில் செல்வதற்கு ஆயத்தமாய் இருந்தபோது அப்பா வேலை செய்யும் இடத்தில் தீடிரென்று மயங்கி விழுந்து விட்டதாகவும், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிட்டதாகவும் அப்பாவுடன் வேலை செய்யும் பழனி அங்கிள் வீட்டில அம்மாட்ட வந்து மூச்சிறைக்க சொன்னார். தங்கை இருவரையும் வீட்டில் விட்டு சாருமதியும், தாயும் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார்கள். அங்கே அப்பா இறந்து விட்டார். துயரம் தங்க முடியாது நான்கு பெண்மணிகளும் அநாதையான உணர்வு அப்பாவின் இறுதி கிரிகைகள் நிறைவுற்றது. பின்பு சாருமதியின் தலை மீது குடும்பச்சுமை சுமத்தப்பட்டது. அப்பா ஆசையாகக் கட்டிய வீடு மட்டுமே சொத்து. இரண்டு தங்கைமாரும் படிப்பை நிறைவு செய்யும் வரை ஓய்வின்றி உழைத்தாள்.

சாருமதி வீட்டிலே பகுதிநேர வகுப்புகளை எடுத்தாள். மிகுதி நேரங்களில் தையல் வேலைகளையும் செய்தாள். சாருமதியின் அயராத உழைப்பால் இரண்டு தங்கைமாருக்கும் திருமணத்தைச் செய்து வைத்தாள். தூரத்தில் பானுமதி திருமணம் செய்திருப்பதால் நேரம் அமையும் போதே அக்கா சாருமதியை பார்க்க வருவாள். கடைக்குட்டி கலைமதி புலம்பெயர் தேசம் ஒன்றிலே திருமணம் செய்திருந்தாள்.

சாருமதி சேமித்த பணம் நகைகள் அத்தனையுமே சீதனமாகத் தங்கைமாருக்கே வாரி வழங்கியிருந்தாள். கால சுழற்சி வேகமெடுக்க தன் வயதைத் திரும்பிப் பார்த்தாள் வயதோ நாற்பது. காலம்

கடந்து விட்டது.

தாயுடன் தனித்து விடப்பட்டாள். பக்கத்து வீட்டுப்பவளம் அக்கா அடிக்கடி வந்து கதைத்துக் கொண்டிருப்பார்.

"சாரு ஐம்பது வயது ஒரு வரன் வந்திருக்கு உனக்கு பேசுவாமா" பவளம் கேட்டதுமே

சாருமதி அதிர்ச்சியில் "அக்கா இந்தவயதில் எனக்குக் கலியாணம் தேவை தானா சும்மா இருங்க அக்கா"

எத்தனை அலங்காரம், பெண்பார்க்கும் படலம் என்கின்ற பெயரில் நடந்தேறிய அட்டூழியங்கள் இவை.

வெறுத்துப்போனாள். அதனால் இப்படியே வரும் வரன்களை வயதைக் காரணம் காட்டி தட்டிக் கழித்தாள்

> **"சாரு ஐம்பது வயது ஒரு வரன் வந்திருக்கு உனக்கு பேசுவாமா" பவளம் கேட்டதுமே சாருமதி அதிர்ச்சியில் "அக்கா இந்த வயதில் எனக்குக் கலியாணம் தேவை தானா சும்மா இருங்க அக்கா" எத்தனை அலங்காரம், பெண்பார்க்கும் படலம் என்கின்ற பெயரில் நடந்தேறிய அட்டூழியங்கள் இவை**

சாருமதி. "சாரு எனக்குப் பிறகு நீ அநாதையாக நிற்கக் கூடாது நான் கண் மூட முன்னமே உனக்கு ஒரு வாழ்கையை தேடிக்கொள் சாரும்மா" தாயின் அன்பு நச்சரிப்பைத் தாங்க முடியல.

காலக்கொடுமை அழகிருந்தும், தொழிலிருந்தும் இளமையைத் தொலைத்து விட்ட கவலை சாருமதிக்கு

பெண் பார்க்கவரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பணத்தைத் தான் பார்த்தார்களே தவிர சாருமதி என்கின்ற பெண்ணின் மனதையோ குடும்ப சூழலையோ யாருமே பொருட்டாக மதிக்கவில்லை.

> **தனக்குள்ளே வேதனைகளைப் பூட்டியவளாய் எழுந்து சமையல் செய்யச் சென்றாள். ஐந்து வருடங்களாகத் தாய் படுத்த படுக்கையாக.......தாயின் இழப்பின் பிறகு சாருமதி தனிமையானாள்**

உயிரற்ற பணத்திற்கு இருந்த மதிப்பு உயிருள்ள அவளுக்கு இருக்க வில்லை. தங்கை இருவருமே ஆசைப்பட்ட வாழ்க்கையைச் செய்து வைத்தாள். தன் தந்தையின் கடமைகளை நேர்த்தியாக நிறைவேற்றினாள். தனக்குள்ளே வேதனைகளைப் பூட்டியவளாய் எழுந்து சமையல் செய்யச் சென்றாள். ஐந்து வருடங்களாகத் தாய் படுத்த படுக்கையாக....... தாயின் இழப்பின் பிறகு சாருமதி தனிமையானாள். இந்தநாட்டில் தொடரும் வன்முறைகளில் சீதனமும் ஒன்றே அவள் முதிர்கன்னியாக இன்று தனிமையில் வாழ்கின்றாள்.





## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

"பைந்தமிழ் உறவுப்பாலம்" வேலைத் திட்டத்தின் கீழ் மண்டூர் 14 , சக்தி மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குப் புத்தகப்பைகள் உட்பட்ட 6 இலட்சம் ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் , கல்முனை றொட்டரிக்கழகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. கல்முனை றொட்டரிக் கழகத் தலைவர் ஏ.ஏல்.ஏ.நாசர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு Assist RR அமைப்பினால் அனுசரணை வழங்கப்பட்டுள்ளது.

– வி.ரி.சகாதேவராஜா





## பரிசோதனை...

மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் புதன்கிழமை(20) நடைபெற்றுள்ளது . களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் அபய விக்கிரம தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது பொலிஸ் பொறுப்பதிகாரிகளினால் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் சின்னங்கள், சீருடைகள், பயன்படுத்தும் வாகனங்கள், உள்ளிட்ட அனைத்தும் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

– வ.சக்தி







## விழிப்புணர்வு பேரணி

திருகோணமலை மாவட்டம் , குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்கள், சிறுவர் வள நிலையங்கள் இணைந்து போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியொன்றை செவ்வாய்க்கிழமை (19) முன்னெடுத்துள்ளனர் .
நாவற்சோலை சிறுவர் வள நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பேரணியில், குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இளைஞர் கழகங்களைச் சேர்ந்த இளைஞர்கள், சிறுவர்கள், பொதுமக்கள், அரச அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் உட்பட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

– ஏ.எச்.ஹஸ்பர்



## சிறுவர் அபிவிருத்திக்குழு கூட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டின் முதலாம் காலாண்டுக்கான சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டம் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (20) நடைபெற்றது.

– யது பாஸ்கரன்

## இப்தார் நிகழ்வு





ஓட்டமாவடி தேசிய பாடசாலையின் 107ஆவது வருடத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஒன்று கூடலும், இப்தார் நிகழ்வும் செவ்வாய்க்கிழமை (19) பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.
பாடசாலையின் அதிபர் எம்.ஏ.ஹலீம் இஸ்ஹாக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம். எஸ்.எஸ்.அமீர் அலி, பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

– எச்.எம்.எம்.பர்ஸான்

நியூசிலாந்து

# இ-சிகரெட்டுக்கு தடை



நியூசிலாந்தில் இ-சிகரெட்டை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடை நியூசிலாந்து அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், 18 வயதுக்குட்பட்டோருக்கு இ-சிகரெட்டினை விற்பனை செய்தால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, உலகின் பல நாடுகள் தற்போது இ-சிகரெட்டைப் பயன்படுத்த தடை விதித்து வருகின்ற நிலையில் நியூசிலாந்தும் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடா

# மனைவியை கொன்று வீடியோவில் தகவல்



ஒட்டாவாவில் வசிக்கும் இந்தியர் ஒருவர் தன் மனைவியைக் கொலை செய்துவிட்டு இந்தியாவில் வசிக்கும் தன் தாயிடம் வீடியோ கோலில் தகவல் கூறிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த ஜக்பிரீத் சிங்-பல்வீந்தர் கவுர் தம்பதிக்குக் கடந்த 2000ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இவர்களுக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர். இந்நிலையில் கனடாவில் படித்து வரும் தனது மகளுடன் பல்வீந்தர் கவுர் வசித்து வந்துள்ளார்.

அதே சமயம் ஜக்பிரீத் சிங் தொழில் இல்லாமல் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு தனது மனைவி மற்றும் மகளைப் பார்க்க அவர் கனடா சென்றுள்ளார்.

இந்நிலையில் கடந்த 15ஆம் திகதி ஜக்பிரீத் சிங், பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் உள்ள தனது தாயிடம் வீடியோ கோல் மூலம் பேசியுள்ளார். அப்போது அவர் தனது மனைவியைக் கத்தியால் குத்தி கொலை செய்து விட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாகக் கனடா பொலிஸாருக்கு தகவல் கிடைத்த நிலையில், அவர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றுள்ளனர்.

அங்கு உயிருக்குப் போராடிய நிலையில் கிடந்த பல்வீந்தர் கவுரை உடனடியாக மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இது குறித்து ஜக்பிரீத் சிங்கின் குடும்பத்தினர் கூறுகையில், அவர்கள் இருவரும் மகிழ்ச்சியான தம்பதியாக இருந்து வந்ததாகவும், இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா



# டிரம்ப் விடுத்த எச்சரிக்கை

“என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யா விட்டால் அமெரிக்கா மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும்” என்று ஓஹியோவில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குடியரசு கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க ஜனாதிபதியாகக் கடந்த 2016ஆம் ஆண்டு வெற்றி பெற்றார். அதனைத் தொடர்ந்து நடந்த 2020ஆம் ஆண்டு தேர்தலில் ஜனநாயகக் கட்சியைச்சேர்ந்த ஜோ பைடனை எதிர்த்துப் போட்டியிட்டார்.

அந்த தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்று அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார்.

நான்கு ஆண்டுகள் கொண்ட அமெரிக்க ஜனாதிபதி பதவிக்காலம் இந்த ஆண்டுடன் முடிவடைகிறது. இந்தாண்டு நவம்பர் மாதத்தில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில், இத் தேர்தலில் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மீண்டும் போட்டியிட உள்ளார்.

அவரை எதிர்த்து டொனால்ட் டிரம்ப் போட்டியிடுவார் என சில தினங்களுக்கு முன் கூறப்பட்டு வந்த நிலையில், இதற்கான பிரசாரக் கூட்டத்தின் போதே டிரம்ப் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாமக்கல்

காந்தி போல வேடமிட்டு

# வேட்புமனு தாக்கல்



காந்தி போல் வேடமிட்டு கட்டுப்பண தொகையான 25 ஆயிரத்தை 10 ரூபாய் நாணயங்களாக மாற்றி வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த நபரால் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

நாமக்கல் அடுத்த செல்லப்பம்பட்டியை சேர்ந்தவர் காந்தியவாதி ரமேஷ். இவர் காந்தி போல் வேடமிட்டு தொடர்ந்து சமூக நல பணிகள் உள்ளிட்டவற்றை மேற்கொண்டு வருகிறார்.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் (மார்ச் 20) முதல் தொடங்கியுள்ளது. இதையொட்டி, காந்தி போல் வேடமிட்டு அணிந்து வந்த ரமேஷ், கட்டுப்பண தொகையான 25 ஆயிரத்தை 10 ரூபாய் நாணயங்களாக மாற்றி, தோளில் சுமந்தபடி நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்து மாவட்ட தேர்தல் அலுவலர் ச.உமாவிடம் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார்.

சென்னை

# பறக்கும் படையினரால் பொதுமக்கள் அவதி



“தேர்தல் நடத்தை விதிகள் அமுலுக்கு வந்த நிலையில், பறக்கும் படையினர் பொதுமக்களின் வாகனங்களை வழிமறித்து சோதனை செய்கின்றனர். அப்போது வாகனத்தில் உள்ள பணம் மற்றும் பொருட்களைப் பறிமுதல் செய்கின்றனர். இதனால் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச்செல்லும் வியாபாரிகள், பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகின்றனர்” என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் இளைஞரணி தலைவர் எம். யுவராஜா தெரிவித்துள்ளார்.

“மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு ஏப்ரல் 19ஆம் திகதி முதல் ஜூன் 1ஆம் திகதி வரை 7 கட்டங்களாக நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதையடுத்து தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்த நிலையில், பறக்கும் படையினர் பொதுமக்களின் வாகனங்களை வழிமறித்து சோதனை செய்கின்றனர். அப்போது வாகனத்தில் உள்ள பணம் மற்றும் பொருட்களைப் பறிமுதல் செய்கின்றனர். இதனால் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச்செல்லும் வியாபாரிகள், பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகின்றனர்.

பெங்களூர்

தமிழருக்கு எதிரான கருத்துக்கு

# மன்னிப்பு கோரினார் மத்திய இணை அமைச்சர்



பெங்களூர் குண்டுவெடிப்பில் தமிழர்களை தொடர்புப்படுத்திப் பேசிய விவகாரத்தில் கடும் கண்டனங்கள் எழுந்த நிலையில், மத்திய இணை அமைச்சர் ஷோபா கரந்த்லஜே தனது கருத்துக்குப் பகிரங்க மன்னிப்பு கோரினார்.

பெங்களூர், இராமேஸ்வரம் கஃபே குண்டுவெடிப்புக்குத் தமிழர்களே காரணம் என அவர் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையான நிலையில், இதற்கு பல்வேறு தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தன்னுடைய பேச்சு தொடர்பாக விளக்கமளித்துள்ள ஷோபா,

“கிருஷ்ணகிரியில் பயிற்சி பெற்ற பெங்களூர் உணவக குண்டுவெடிப்பில் தொடர்பு கொண்டவர்கள் குறித்து மட்டுமே எனது கருத்து இருந்தது. தமிழ்நாட்டில் யாரேனும் எனது கருத்தால் பாதிக்கப்பட்டிருந்தால் மனப்பூர்வமாக மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.



# ஹசரங்கவுக்கு 2 டெஸ்ட் தடை

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலிருந்து இலங்கையின் சகலதுறை வீரரான வனிடு ஹசரங்க இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷுக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியின்போது நடுவரொருவரிடமிருந்து தனது தொப்பியை பறித்த ஹசரங்க, அப்போட்டியின் நடுவர் பணியை விமர்சித்திருந்தார்.

துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

# பதும் நிஸங்க முன்னேறினார்



சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் எட்டாமிடத்துக்கு இலங்கையின் பதும் நிஸங்க முன்னேறியுள்ளார்.

பங்களாதேஷுக்கெதிரான மூன்று போட்டிகளில் 151 ஓட்டங்களைப் பெற்ற நிஸங்க, 11ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.பாபர் அஸாம், 2.ஷுப்மன் கில், 3.விராட் கோலி, 4.றோஹித் ஷர்மா, 5.ஹரி டெக்டர், 6. டரைல் மிற்செல், 7.டேவிட் வோர்னர், 8.பதும் நிஸங்க, 9.டேவிட் மலன், 10. றஸி வான் டர் டுஸன்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.கேஷவ் மஹாராஜ், 2.ஜொஷ் ஹேசில்வூட், 3.அடம் ஸாம்பா, 4.மொஹமட் சிராஜ், 5.ஜஸ்பிரிட் பும்ரா, 6. மொஹமட் நபி, 7.ஷகீன் ஷா அஃப்ரிடி, 8.குல்தீப் யாதவ், 9.ட்ரெண்ட் போல்ட், 10.பெர்னார்ட் ஸ்கொல்ட்ஸ்.

முதல் ஐந்து சகலதுறை வீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.மொஹமட் நபி, 2.ஷகிப் அல் ஹஸன், 3.சிகண்டர் ராசா, 4.அசாட் வலா, 5.ரஷீட் கான்.

இதேவேளை, அயர்லாந்துக்கெதிரான மூன்று இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஆப்கானிஸ்தானின் ரஷீட் கான் பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் 13ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.அடில் ரஷீட், 2.வனிடு ஹசரங்க, 3.அகீல் ஹொஸைன், 4.அக்ஸர் பட்டேல், 5.மகேஷ் தீக்‌ஷன, 6.ரவி பிஷ்னோய், 7.ஜொஷ் ஹேசில்வூட், 8.தப்ரையாஸ் ஷம்சி, 9.மிற்செல் சான்ட்னெர், 10.ரஷீட் கான்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.சூரியகுமார் யாதவ், 2.பில் ஸோல்ட், 3.மொஹமட் றிஸ்வான், 4.பாபர் அஸாம், 5.ஏய்டன் மார்க்ரம், 6.யஷஸ்வி ஜைஸ்வால், 7.றீலி றொஸோ, 8.பின் அலென், 9.ஜொஸ் பட்லர், 10.றீஸா ஹென்ட்றிக்ஸ்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ஷகிப் அல் ஹஸன், 2.வனிடு ஹசரங்க, 3. மொஹமட் நபி, 4.ஏய்டன் மார்க்ரம், 5.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்.

கல்முனை கரப்பந்தாட்டம், கபடி:

# றியலியன்ஸ் சம்பியன்



கல்முனை பிரதேச கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டம், கபடித் தொடரில் றியலியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற கரப்பந்தாட்ட, கபடித் தொடர்களின் இறுதிப் போட்டிகளில் பிரில்லியன்ட் விளையாட்டுக் கழகத்தை வென்றே றியலியன்ஸ் சம்பியனானது.



பெருவிரல் முறிவடைந்தமையால்

# தொடரிலிருந்து ரஹீம் விலகல்

பெருவிரல் முறிவடைந்ததன் காரணமாக இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரிலிருந்து பங்களாதேஷின் முஷ்பிக்கூர் ரஹீம் விலக வேண்டியேற்பட்டுள்ளது.

முறிவிலிருந்து மீள ரஹீமுக்கு குறைந்தது மூன்று வாரங்கள் தேவை என பங்களாதேஷின் உடற்கூற்று நிபுணர் பெஜெடுல் இஸ்லாம் கான் உறுதிப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்கெதிரான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியின்போது தஸ்கின் அஹ்மட்டின் பந்தொன்று தாக்கிய நிலையிலேயே ரஹீமுக்கு இக்காயம் ஏற்பட்டுள்ளது.

ரஹீமின் பிரதியீடை தேர்வாளர்கள் அறிவிக்காத நிலையில் சௌமியார் சர்கார், தௌஹிட் ஹிரிடோய், தன்ஸிட் ஹஸன், ஜாகிர் அலி, அனமுல் ஹக், நயீம் இஸ்லாம் ஆகியோர் கருத்திற் கொள்ளப்படாலமெனத் தெரிகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 21, மார்ச் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.